சுருக்கம்

2021-2022 ஆம் ஆண்டு அறிவிப்பு - தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டுவதற்கு / தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளைக் வாங்குவதற்கு வீட்டுவசதித் திட்டம் அறிமுகம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ஐ2) துறை

அரசாணை( நிலை) எண்.7

நாள் :10.01.2022
பிலவ வருடம், மார்கழி 26
திருவள்ளுவர் ஆண்டு-2052
படிக்கவும் :

1. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் 04.09.2021 ஆம் நாளிட்ட அறிவிப்பு.
2. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட 06.10.2021 மற்றும் 19.11.2012ஆம் நாளிட்ட B2/14597/2021 ஆம் எண் கடிதம்.
3. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரிடமிருந்து பெறப்பட்ட 11.10.2021 மற்றும் 19.11.2021 ஆம் நாளிட்ட W4/29009/2021ஆம் எண் கடிதம்.

ஆணை:-

2021-2022 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்ட கூட்டத் தொடரின் போது, 04.09.2021 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார்:-

"தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற, சொந்தமாக வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் சொந்தமாக வீட்டு மனை வைத்திருந்தால் அவர்களாகவே வீடு கட்டிக்கொள்ள நிதி உதவி வழங்குவது அல்லது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற நிதி உதவி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்".

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், முதன்மைச் செயலாளர்/தொழிலாளர் ஆணையர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் சொந்த நிலங்களில் வீடுகள் கட்டுவதற்கு / தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் வாயிலாக குடியிருப்புகளை வாங்குவதற்கு ரூ.4.50 இலட்சம் நிதியுதவி வழங்குவதற்கும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் நிதியிலிருந்து இந்தச் செலவினத்தை செய்வதற்கும் கருத்துருவை அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. அரசு, கவனமாக பரிசீலித்த பின்னர் தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பை ஏற்று, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தை அறிமுகப்படுத்தவும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் சொந்த நிலங்களில் வீடுகள் கட்டுவதற்கு / தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் வாயிலாக குடியிருப்புகளை வாங்குவதற்கு ரூ.4.00 இலட்சம் நிதியுதவி வழங்குவதற்கும் இதன் வாயிலாக அனுமதி அளிக்கிறது. மேலும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் நிதியிலிருந்து இந்த செலவினத்தை செய்வதற்கும் பின்வரும் நிபந்தனைகளை வகுத்துள்ளது.

i. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் உறுப்பினர்களிலிருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன்படி தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும்.

ii. வீட்டுத் திட்டத்தின் பயனாளிகள் நிதி உதவியைப் பெறுவதற்கு, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டம் (BLC) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்தல் ஆகிய இரண்டு வழிகளில் ஒன்றைத் தேர்வு செய்யலாம்.

iii. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் (BLC) திட்டத்தில் வீடு கட்டுவதற்கான குறைந்தளவு வீட்டின் அளவு 300 சதுர அடியாகும். இதற்காக ரூ.2.76 இலட்சமும் ரூ.1.25 இலட்சம் கூடுதல் செலவும் அனுமதிக்கப்படும். பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் (BLC) திட்டத்தின் கீழ் பயனாளிக்கு சொந்தமான நிலம் கிராமப்புறத்தில் இருக்கும் நேர்வில் பிரதமரின் வீடு

கட்டும் திட்டத்தின் (கிராமப்புறம்) (PMAY(R)) கீழ் பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA) வாயிலாக மேலே குறிப்பிடப்பட்ட உதவித் தொகை வழங்கப்படும். மேலும் அந்த மனை நகர்ப்புறத்தில் இருக்கும் நேர்வில், பிரதமரின் வீடு கட்டும் (நகர்ப்புறம்) (PMAY(U)) திட்டத்தின் கீழ் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் வாயிலாக உதவித் தொகை வழங்கப்படும்.

iv. பிரதமரின் வீடு கட்டும் (நகர்ப்புறம்) (PMAY(U)) திட்டத்தின் கீழ் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பை பயனாளி தேர்வு செய்யும் நேர்வில், அதிகளவு உதவித் தொகையான ரூ.4 இலட்சத்திற்கு உட்பட்டு மட்டுமே பயனாளிக்கு செலுத்த வேண்டிய தொகை அனுமதிக்கப்படும்.

v. மேலே குறிப்பிட்டுள்ள திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நிதியுதவி ரூ.4.00 இலட்சம் (ஒரு வீட்டின் செலவு தொகை ரூ.2.76 இலட்சமும் கூடுதல் செலவு ரூ.1.25 இலட்சம்) பயனாளிக்கு வீடு கட்டும் திட்ட உதவியாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்படும்.

vi. இந்த திட்டத்தில் பயன்பெறும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் உள்ளபடியான எண்ணிக்கை தெரியவில்லை. மேலும் பயனாளிகளின் எண்ணிக்கை 10,000 க்கு மேல் இருக்குமாயின், அது ஆண்டுக்கு 10,000 பயனாளிகளுக்கு என கட்டுப்படுத்தப்படலாம்.

vii. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக இந்த தொடர் செலவினத்தை மேற்கொள்ள வாரியம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்குவதற்கான தகுதிகள்/நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

4. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்வதை மற்றும் வீட்டுவசதித் திட்ட உதவிகள் வழங்குவதைக் கண்காணிப்பதற்கு பின்வருபவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பின்வரும் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு/ மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட வேண்டும்.

மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு :-

1) அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை.
2) முதன்மை செயலாளர்/தொழிலாளர் ஆணையர்.

3) ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

4) மேலாண் இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்.

5) நிதித் துறையின் பிரதிநிதி மற்றும்

6) செயலாளர், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்.

திட்டத்தை திறம்பட செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காக மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் காலாண்டுக்கு (மூன்று மாதங்களுக்கு) ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.

மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு:-

1) மாவட்ட ஆட்சியர்

2) நகராட்சி ஆணையர் / மாநகராட்சி ஆணையர் (நகராட்சி / மாநகராட்சி பகுதியில் வீடு கட்டப்படும் நேர்வில்)

3) திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் (DRDA) (கிராமப் பகுதியில் வீடு கட்டப்படும் நேர்வில்)

4) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திலிருந்து சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர்

5) மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (SSS).

கோரிக்கை விண்ணப்பங்களின் நிலை, செயல்படுத்தும் துறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் கோரிக்கைகள் மற்றும் பயனாளிகளுக்கு வீட்டுவசதித் திட்ட உதவித்தொகையை விரைவாக வழங்குவதற்கும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட வேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது [காண்க:30.11.2021 ஆம் நாளிட்ட அ.சா.கு.எண்75/ADS(PW/D)/நிதி(தொழ& திமேது) /2021]

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிர்லோஷ் குமார்
அரசு செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/தொழிலாளர் ஆணையர், சென்னை-600 006.

அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை-600 009.

அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை–600 009.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்,
சென்னை–600 034.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (தொழிலாளர் ஆணையர் வாயிலாக)
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–600 015.
மேலாண் இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
சென்னை–600 005.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–600 018.

நகல் பெறுவோர் :
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சரின் சிறப்பு
தனி உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின் சிறப்புத்
தனி உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் சிறப்புத்
தனி உதவியாளர், சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரின் முதுநிலை
தனி உதவியாளர், சென்னை–600 009.
அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
நிதித்துறை, சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (அநமு2–2) துறை,
சென்னை–600 009.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல் (கோ.எண்.17853/12/2021)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஒப்பம்/–xx
பிரிவு அலுவலர்

//உண்மை நகல்//

10/01/2024
பிரிவு அலுவலர்
10/1/2024

# இணைப்பு

I. வீட்டு வசதி திட்டத்திற்கான தகுதி :-

- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கான திட்டமாகும்
- கட்டுமானத் தொழிலாளர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் குறைந்தளவு 3 ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட கால அளவிற்கொரு முறை புதுப்பித்தலுடன் பதிவு செய்திருக்க வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளி அல்லது அவரது குடும்பத்தார் யாதொரு நிரந்தரமான கற்காரை வீடு சொந்தமாக வைத்திருக்கக் கூடாது.
- அரசின் ஏனைய யாதொரு வீட்டுவசதித் திட்டத்தின் கீழும் பயன் பெற்றிருக்கக் கூடாது.
- கருதப்பட்ட பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.3,00,000/-க்கு குறைவாக இருக்க வேண்டும்.
- குறைந்தளவு 300 சதுர அடி வீட்டைக் கட்டுவதற்கு போதிய அளவு மனை இருக்க வேண்டும். (பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தைப் (BLC) பெறுவதற்கு)
- பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் பெயரில் மனைக்கான தெளிவான பட்டா அல்லது பதிவுபெற்ற தொழிலாளி மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுடன் கூட்டுப் பட்டா இருக்க வேண்டும். (பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தைப் (BLC) பெறுவதற்கு)

II. பயனாளி வீடுவசதித் திட்டத்தை பின்வரும் இரண்டு திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் பெறலாம்.

a) பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டம் (BLC) அல்லது
b) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்வதன் வாயிலாக.

a) பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டம் (BLC)

- பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு அவர்களாகவே வீடுகட்டிக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் (BLC) திட்டத்தில் வீடு கட்டுவதற்கான குறைந்தளவு வீடு அளவு 28 ச.மீ. (அல்லது) 300 சதுர அடியாகும்.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் பணிமூப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதனடிப்படையில் பயனாளி தேர்வு செய்யப்பட வேண்டும்.
- இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி தகுதியான பயனாளிகள் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையரால் (SSS) தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் பட்டியலில் பயனாளியின் பெயர், முகவரி, பதிவு எண், ஆதார் எண், வங்கி கணக்கு எண், பதிவு செய்த காலஅளவு, கட்டடத் திட்டம், நிலத்தின் உரிமை போன்ற அனைத்து விவரங்களும் இருக்க வேண்டும்.
- உரிய மாவட்டத்தின் தொழிலாளர் உதவி ஆணையர் (SSS) ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் உரிய சரிபார்ப்புக்குப் பின்னர், பயனாளி ஏனைய யாதொரு அரசுத் திட்டத்தின் கீழும் வீட்டு வசதித் திட்ட உதவியைப் பெறவில்லை என்பதைச் சரிபார்ப்பதற்காக ஆவணங்களுடன் விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் தேவையான இறுதி ஒப்புதலுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு அனுப்ப வேண்டும்.
- இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக மாவட்ட உதவித் தொழிலாளர் ஆணையர்கள் (SSS) , வீடுகட்டும் திட்ட உதவிக்கான இறுதி ஒப்புதல் ஆணை மற்றும் அனுமதி ஆணையின் பட்டியலை உரிய வட்டார வளர்ச்சி அலுவலரிடமும் (பயனாளியின் மனை கிராமப் பகுதியில் இருக்கும் நேர்வில்), ஆட்சியர் அல்லது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் (பயனாளியின் மனை நகர்ப்புறத்தில் இருக்கும் நேர்வில் ) ஒப்படைக்க வேண்டும்.

b) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்வதன் வாயிலாக :–

- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட வீட்டு மனைகளை ஒதுக்கீடு பெறுவதற்கு விரும்பும் பயனாளிகள், அவர் பெயரில் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் யாரேனும் பெயரில் (மனைவி/கணவன்

அல்லது திருமணமாகாத குழந்தைகள்) சொந்தமாக கற்காரை வீடு வைத்திருக்கக் கூடாது.

- பயனாளிகள் அவர்கள் விருப்பத்திற்கேற்ப குடியிருப்புத் திட்டத்தை தேர்வு செய்வார்கள்.
- இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி தகுதியான பயனாளிகள் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையரால் (SSS) தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் பட்டியலில் பயனாளியின் பெயர், முகவரி, பதிவு எண், ஆதார் எண், வங்கி கணக்கு எண், பதிவு செய்த காலஅளவு போன்ற அனைத்து விவரங்களும் இருக்க வேண்டும். மேலும் அதன்படி பணி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும்.
- உரிய மாவட்டத்தின் தொழிலாளர் உதவி ஆணையர் (SSS) ஒவ்வொரு விண்ணப்பத்தையும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் உரிய சரிபார்ப்புக்குப் பின்னர், பயனாளி ஏனைய யாதொரு அரசுத் திட்டத்தின் கீழும் வீட்டு வசதித் திட்ட உதவியைப் பெறவில்லை என்பதைச் சரிபார்ப்பதற்காக ஆவணங்களுடன் விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் தேவையான இறுதி ஒப்புதலுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு அனுப்ப வேண்டும்.
- இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக மாவட்ட உதவித் தொழிலாளர் ஆணையர் (SSS) வீட்டுவசதித் திட்ட உதவிக்கான இறுதி ஒப்புதல் ஆணை மற்றும் அனுமதி ஆணையுடன் தகுதியான பயனாளிகளின் பட்டியலை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் வீடு ஒதுக்கீடு செய்வதற்காக அந்த வாரியத்திடம் வழங்குவதற்காக, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திடம் அளிக்க வேண்டும்.

இரா. கிர்லோஷ் குமார்,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

ஒப்பம்/-xx
பிரிவு அலுவலர்

//உண்மை நகல்//

10/01/2024
பிரிவு அலுவலர்

10/1/2024